பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 26 ஸபர் 29 இதழ் 360
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-2-78

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1978 -2-
PERIODICALS DIVISION

சஞ்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஒர் லாலா தயாரிப்பு...
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# சன்சோனிகமிஷன் இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

1977 ஆகஸ்ட் கலவர சம்பவம் தொடர்பான சன்சோனிகமிஷன்விசாரணைகள்இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும். கமிஷன்விசாரணைகள், யாழ்ப்பாணத்தில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் இம்மாதம் 18ந் திகதிவரை நடைபெறும்

இவ்வாரத்தின் முதல் நான்கு நாட்களிலும், யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் நடைபெறும். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா ஆகியோர் முதலில் சாட்சியமளிப்பார்கள்.

வவுனியா சம்பவங்கள் பற்றிய சாட்சியங்கள் 13, 14ம் திகதிகளிலும், முல்லைத்தீவுச் சம்பவங்கள் 15ம் திகதியும் மன்னார் சம்பவங்கள் 16-ம் திகதியும், அனுராதபுரச் சம்பவங்கள் பற்றிய சாட்சியங்கள் 17ம், 18ம் திகதிகளிலும் யாழ்ப்பாணத்தில் வைத்து கமிஷனால் பதிவுசெய்யப்படும்.

யாழ்ப்பாணத்தில் சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக கொழும்பில் வைத்து 60 பேருக்கு கமிஷன் அழைப்பாணை அனுப்பியபோதிலும் கூடுதலானவர்கள் இங்கு சாட்சியமளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சார்பில்....

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட்மாத இனக்கலவரத்தினல் பாதிக்கப்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை தமிழ் ஊழியர்கள் சார்பில் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்க மகஜர் கொடுத்துள்ளது.

தமிழ்தொழிற்சங்கக் கூட்டணியின் சார்பில் திரு. நவரத்தினராசா கியூ.சி. தலைமையில் பல சட்டத்தரணிகள் வாதாடுவதற்கு முன்வந்துள்ளனர். தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் சார்பில் சாட்சியமளிப்பார். தமிழ்தொழிற்சங்கக்கூட்டணியின் பொதுச்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் பாதிக்கப்பட்ட பகுதிகளான அனுராதபுரம், வவனியா, கந்தளாய் பகுதிகளுக்குச் சென்று சாட்சிகள் திரட்டி வந்துள்ளார். சுமார் 25 சாட்சியங்களை கூட்டணி தயாரித்துள்ளது. இவர்களுடைய சாட்சியங்கள், யாழ்ப்பாணம், கொழும்பு, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வைத்து சன்சோனி கமிஷன்முன் அளிக்கப்படும்.

இன்று [புதன்கிழமை] ஆரம்பமாகும் சன்சோனி கமிஷன் விசாரணையில் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு, பொதுச்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் ஆகியோர் சட்டத்தரணிகளுடன் சமுகமளிப்பர்.

## சுதந்திரக்கட்சி சார்பில் தமிழர் போட்டியிடலாம்

[கொழும்பு]

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் கொழும்பு மேற்குத் தொகுதிக்கான இடைத் தேர்தலில், கட்சிரீதியாகவும், சுயேச்சையாகவும்பலர் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனதிபதியானதைத் தொடர்ந்து இடைத் தேர்தல் நடைபெறும் இத்தொகுதியில் இம்மாதம் இருபதாம் திகதி அளவில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படலாமென்றும், அடுத்தமாதம் பிற்பகுதியில் தேர்தல் நடைபெறுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ தே. கட்சி சார்பிலான அபேட்சகர் இன்னும் தெரிவு செய்யப்படவில்லை. ல. ச. ச. கட்சி சார்பில் திரு. பேர்னுட் சொய்ஸா போட்டியிடலாமென்று நம்பப்படுகிறது. ஸ்ரீ ல. சு. கட்சி சார்பில் தமிழர் ஒருவர் நிறுத்தப்படலாமென்று சுதந்திரக்கட்சிவட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. இவை தவிர சுயேச்சையாக சிலர் போட்டியிடவும் முன்வந்திருக்கின்றார்களாம். [ம]

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிங்கள ஆண்டு தைத்திங்கள் 26-ம் நாள் (8-2-78) புதன்கிழமை இரவு 9-00 மணி முதல் 11-30 மணி வரையுமுள்ள துலா லக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
நடராசா
(கணக்காளர், தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைசெல்வி
ஞானம்பாள்
அவர்களுக்கும்

திருவருள் நலத்தினல் மணமகளில்லத்தில் திருமணம் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசரணை: மணமகள் இல்லத்தில் 9-2-78 வியாழக்கிழமை பிற்பகல் 4-00—8-00 மணிவரை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. க. வைரவப்பிள்ளையும் பாரியாரும்
கருகம்பனை,
காங்கேசன்துறை.

திரு. ச. கந்தசாமியும் (காந்தி) பாரியாரும்
"ஞானவாசா"
சுளிபுரம் வடக்கு, சுளிபுரம்.

8436

அமரர் ஜி. ஜி. நினைவுதினம்

## வானொலியில் நாளை மும்மொழியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தையொட்டி, நாளை இரவு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் வானெலியில் அஞ்சலி உரை நிகழ்த்தப்படவிருக்கிறது.

ஜி ஜி. ஞாபகார்த்தக் குழுவினர் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

சிங்களத்தில் நாளை இரவு 6-15 மணிமுதல் 6-30 மணி வரையும், தமிழில் இரவு 7-45 மணி முதல் 8-00 மணிவரையும், ஆங்கிலத்தில் 8-00 மணி முதல் 8-15 மணிவரையும் அஞ்சலி உரை நிகழ்த்தப்படும்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபன உதவி மா அதிபர் திரு டி ரி. எல். குருகே ஜி. ஜி. ஞாபகார்த்த குழு செயலாளருக்கு இதனை அறிவித்துள்ளார்.

ஜி. ஜி. நினைவு தினத்தையொட்டி நாளை நல்லூர் கந்த

(6-ம் பக்கம் பார்க்க)

சுருட்டுத் தொழிலாளர்

## திட்டமிட்டபடி வேலைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளரின் வேலை நிறுத்தக் கோரிக்கையைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் வடபகுதியில் 14,700 சுருட்டுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர் என்று சங்கத் தலைவர் ஆ. துரைராஜசிங்கம் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வேலைநிறுத்தம் எதிர் வரும் 10-ம் திகதிவரை திட்டமிட்டபடி நடைபெறுமாம்.

தற்போது சுருட்டுத் தொழிலாளருக்கு வழங்கப்படும் வேதனமான 1000-க்கு ரூ.27-50 சதத்தை ரூ. 32-50 சதமாக உயர்த்தும்படி முதலாளிமார்களைக் கோரி இவ்வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது.

இதே வேளையில், சுமார் 180 முதலாளிமார்கள், 1000 சுருட்டுகளுக்கு வேதனமாக ரூ. 32-50 சதம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதே நேரத்தில் சகல முதலாளிமார்களும் இணக்கம் தெரிவிக்கும் வரை வேலைநிறுத்தம் 10-ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறுமென்றும் வேலைநிறுத்தம் கைவிடப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கெ)

### கூலி உயர்வு முதலில்வேண்டும்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தீர்மானப்படி ரூபாய் 27-50 சரிகூலிபெறப்படாதவரை மேலும் கூலி உயர்வுக்குப் போராடுவது அர்த்தமற்ற செயலாகும் என்று இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 'சங்கம் வேண்டிக் கொடுத்த சரி கூலியை முதலாளிமார்கள் படிப்படியாகக் குறைத்து இப்போது ரூபா 18 முதல் 26 வரை கொடுக்கிறார்கள். இந்த நிலையில் அப்பாவித் தொழிலாளர் ஒன்றும்றியாத நிலையிலிருக்கிறார்கள். தொழி

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ். பழைய மார்க்கட் கடைகள்

## மாத இறுதியில் திறக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

பழைய மார்க்கட்டில் கட்டப்பட்டு வரும் புதுயகடைகள் இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இக்கடைகள் இம்மாதம் 10-ம் திகதி திறந்துவைக்கப்படும் என்று பஸ் நிலையக் கடைகள் திறப்புவிழாவில், ஆணையாளர் திரு. கே. சிவஞானம் அறிவித்திருந்தார்.

சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக இக்கடை வேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள இருகட்டடங்கள் பூர்த்தியடைந்த நிலையிலுள்ளன. மூன்றுவது கட்டட வேலை நடைபெற்று வருகிறது. (க-அ)

## ஜி. ஜி. நினைவு தின மலர்

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தையொட்டி ஜி. ஜி ஞாபகார்த்த குழுவினர், வெளியிடும் நினைவுதின மலர், நாளை "ஈழநாடு" இதழுடன் வெளிவரவிருக்கிறது.

# வரி விளம்பரம்

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்போது சம்பளம் ரூபா 3/75. நேரில் வரவும். விபரங்களுக்கு: பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8439

தொழிற்பயிற்சி பெறுவோர் தேவை, சம்பளம் 185/- வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். ஜெயதிரன் தொழிற்சாலை, 83, கண்டி வீதி, சாவகச்சேரி. (அரசாங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்டது) 8435

ஹோட்டல் சப்ளையர், ஐஸ்கிறீம் தயாரிப்பாளர், இடியப்பம், ரொட்டி, சுவீட்ஸ் போடக்கூடியவர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8437

பப்படம் தயாரிப்பதில் அனுபவமுள்ள பெண்கள் உடனடியாகத் தேவை. வேலை பழகுவோரும் சேர்த்துக்கொள்ளப்படும். நேரில் காலை 7 மணி முதல் 9 மணிக்குள் வரவும். கிருஷ்ணா பப்படத் தொழிற்சாலை, புலவனார் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 8430

அச்சகத்திற்கு பிளேற்றின் மெஷின் மைன்டர்கள், றூளிங் வேலை தெரிந்தவர்கள், ஆங்கிலம், தமிழ் கொம்போசிட்டர்கள், தொழில் பயில விரும்பும் பையன்கள் தொடர்பு கொள்ளவும். திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம். 8423

## தேவை

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8411

## விற்பனைக்கு

அராலி கிராமசபையில் பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். விசேட ஆணையாளர், அராலி கிராமாட்சி மன்றம். 8443

எமது N. S. மக்கள் பப்படமும், இரட்டைப் புலி மார்க் பப்படமும் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. கிருஷ்ணா பப்படத் தொழிற்சாலை, புலவனார் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 8431

நீமியா உரம்: மிளகாயிலும் வெங்காயத்திலும் அதிக விளைச்சலைப் பெற நீமியா உரத்தைப் பாவியுங்கள்.— ஓர் மில்க்வைற் தயாரிப்பு. 8362

(M. I.) எம். ஐ. இன மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. வ. தம்பிராசா, லிங்கம் தோட்டம், கண்டிவீதி, வவுனியா. 8442

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

யாழ் மாவட்ட நீதிமன்றம்

வழ இல ஈடு/75

1. விக்ரர் இம்மனுவல் எனப் பெயர் வழங்கும் விக்ரர் இம்மனுவேல் நீக்கிலாசும்
2. பெண் லில்லி இமல்டாவும், காரம்பன் தற்போது சுருவில், ஊர்காவற்றுறை.

வாதிகள்

எதிராக

அடைக்கலமுத்து மரியாம்பிள்ளை மகள் எலிசபெத் ரஞ்சினி மரியாம்பிள்ளை அல்லது ஐரின் எலிசபெத் ரஞ்சினி இல 4, சென்ஜேம்ஸ்வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/75-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 4970ம் மேலும் ரூபா 3500க்கு 9-4-76 தொடக்கம் 28-10-76 வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியையும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 100க்கு 9 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 505/02 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 283/92 நடைபெறவேண்டிய செலவு ரூபா 125/82. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 97/07) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை: ''அத்தியடியும் அத்தியடிப் புலமும் அத்தியடி புங்கடியிற் புலமும்'' நி. பர 7. இதில் தென்கிழக்குப் பக்கமாக உத்தரவு பெற்ற அளவுக்காரர் கே. கே. அம்புறோஸ் அவர்களால் 1968-ம் ஆண்டு சித்திரை மாதம் 16-ந் திகதி 531-ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் காட்டப்பட்ட 2-ம் இலக்கத்துண்டு நி. பர. 2 இரண்டும் பயிர்களும் எல்லை கிழக்கு சாரிநாதர் அந்தோனிப்பிள்ளை பெண் சிசிலியாவுக்குரிய ஆதனமும் கையொழுங்கையும் வடக்கு பிறடெறிக் பிரான்சிஸ் அந்தோனிப்பிள்ளைக்குரிய ஆதனம் மேற்குறித்தபடத்தில் காட்டப்பட்ட 1-ம் இலக்கத் துண்டு நிலம் தெற்கு தம்பு பாலசிங்கம் பெண் முத்துசாமியினுதனம் இதடங்கலும். இன்னும் குறித்த கையொழுங்கையால் போக்குவரவு செய்யும் வழிப் பாதையுரித்தும் இதடங்கலும்.

**க. சுப்பிரமணியம்,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

89, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
28-12-77. 8438

## காணவில்லை

காசோலை இல. B/18408712 யாழ்ப்பாணம் சாவகச்சேரி பஸ்சில் 6-2-78ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். ம. வேலாயுதம், நுணாவில்மேற்கு, சாவகச்சேரி. 8440



## லண்டன் பயணம்

[யாழ்ப்பாணம்]

அரியாலையைச் சேர்ந்த செல்வன் கிருஷ்ணபிள்ளை ஜெயராசா பொறியியல்துறையில் உயர் கல்வியை மேற்கொள்ளும் பொருட்டு லண்டன் பயணமானார். யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் சிறந்த விளையாட்டு வீரருமாவார். (இ)

## குடமுழுக்கு வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஆழியவளை வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானுக்கு குடமுழுக்கு வைபவம் நடத்தப்பட்டது.

பிரதிஷ்டா குருவாக சிவஸ்ரீ இரத்தின சிவாச்சாரியர் கடமையாற்றினார். சிவஸ்ரீ மகாதேவக்குருக்களும் கலந்து கொண்டார். [உ]

## பண்டத்தரிப்பு கிராமாட்சி மன்றம் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

பின் வரும் விடயங்களையும், காகிதங்களையும், தளபாடங்களையும், மின்சாரப் பொருட்களையும், கட்டிட வேலை, றோட்டுவேலை மற்றும் சேவைகளையும் வழங்குவதற்கும், செய்துகொள்வதற்கும் இவ்வலுவலகத்தோடு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எழுதுகருவி வகைகள், அலுவலக தளபாடங்கள், அச்சிடுதல் பத்திரங்கள், கோலவுடைகள், சுகாதாரவேலை, களஞ்சியப்பொருட்கள். வரித் தகடுகள்.
2. கட்டிடங்களைப் பழுது பார்த்தல், நிர்ணயித்தல், றோட்டுவேலைகள் செய்தல், கிணற்று வேலை செய்தல் மற்றும் கி. ச. நிதி வேலைகள் செய்தல்.

மேற்படி விண்ணப்பங்களை 15-2-78-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இவ்வலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**கி. கோபாலரத்தினம்,**
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு
கிராமாட்சி மன்றம்.

பண்டத்தரிப்பு,
கிராமாட்சி மன்றம்,
30-1-78. 8441

# அச்சுவேலி கொள்ளைவழக்கு இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளை வழக்கு இன்று காலை யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம்.எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

அரச தரப்பில் சட்டத்தரணி குமாரசிங்கா, சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராவார். [க-அ]

# கெற்பேலி கொலைவழக்கு இன்று தொகுப்புரை தொடரும்

[யாழ்ப்பாணம்]

கெற்பேலி கொலைவழக்கு விசாரணை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் ஆரம்பமானது.

இவ்வழக்கில், கெற்பெலியில் 75ம் ஆண்டு செப்டம்பர் 27ந் தேதி கணேசலிங்கம், நாகராசா, நடராசா, சுந்தரலிங்கம் ஆகியோர் கணபதிப்பிள்ளை கந்தையாவை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். யோகநாதன் சட்டத்தரணி வி. விபுலானந்தராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானார்.

விசாரணை முடிவடைந்து, நேற்றுத் தொகுப்புரை ஆரம்பமானது. இன்று காலை தொகுப்புரையைத் தொடர்ந்து; நீதிபதி உரை நிகழ்த்திய பின் தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது. [க-அ]

# ஜே. ஆர். தலைமையில் ஐக்கிய இலங்கை உருவாகும் என்கிறார் மானிப்பாய் அலோஷியஸ்

[யாழ்ப்பாணம்]

''எதிர்காலத்தில் இலங்கையில் சமத்துவமான தார்மீக சமுதாயம் அமைக்க சகலமக்களின் ஒற்றுமையையும், அன்பையும் ஆதரவையும் புதிய ஜனாதிபதி இன்று வேண்டி நிற்கிறார். அவருடைய தலைமையின் கீழ் இந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறி ஐக்கிய இலங்கை உருவாகுமென்ற நம்பிக்கை எமக்குண்டு'' என்று ஐக்கியதேசியக்கட்சியின் மானிப்பாய்த் தொகுதிப் பிரதம அமைப்பாளர் திரு. ஆர். எஸ். அலோஷியஸ் சண்டிலிப்பாய் மத்தி ஐ தே கட்சி கிளையினரால் கொண்டாடப்பட்ட ஜனாதிபதி விழாக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

சண்டிலிப்பாய் மத்தி ஐ.தே.க. கிளைத்தலைவரும், இ. போ. ச. காரைநகர் டிப்போ விநியோக உத்தியோகஸ்தருமான திரு. எம். சபாம்பிள்ளை தலைமையில் மேற்படி விழாவும் விசேட பூசையும் நடைபெற்றன.

திரு சபாம்பிள்ளை பேசும்போது ''மக்களின் தலைவன் ஜே ஆர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கிறார். ஜனாதிபதியின் நிர்வாகத்தில் ஜாதி வேற்றுமையோ மதவேறுபாடோ இன-மொழி வித்தியாசமோ ஏற்படாது. அடிமைச் சட்டங்கள் அகற்றப்பட்டு விட்டன. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகள் ஒழிக்கப்பட்டன. நாம் தொடர்ந்து புதியஜனாதிபதிக்குளமது பூரண ஆதரவை கொடுத்தால் எமது பிரச்சினைகள் நீங்கும், எனவே நாட்டு ஐக்கியத்துக்காகப் பாடுபடவேண்டும்'' என்றார்.

உப தலைவர் திரு இ. ஜெயக்குமார் பேசும்போது, நாட்டின் அதியுயர்ந்த தலைவனாக, சட்டத்தின் காவலனாக இன்று வீறு நடைபோடும் புதிய ஜனாதிபதிக்கு எமது தார்மீக ஆதரவு என்றும் இருக்குமென்றார்.

பிரதம அமைப்பாளர் திரு. அலோஷியஸ் மேற்படி விழாவைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். [அ]

## அந்தியேட்டிக் கிரியை

கு. சி. பாலகிருஷ்ணன்
தோற்றம்: 18-1-1954
மறைவு: 31-12-1977

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரவேலு சின்னத்தம்பி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் 742, உப்புவெளி, திருமலை திருமதி கனகாம்பிகை சதாசிவத்தின் வளர்ப்பு மகனும், திருவாளர்கள் பாலசுப்பிரமணியம், கதிர்காமநாதன், கிருஷ்ணநாதன், செல்வி நாகலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரருமாகிய காலஞ்சென்ற செல்வன் கு. சி. பாலகிருஷ்ணனின் (கனி) அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 9-2-78 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு உப்புவெளியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். திருமதி க. சதாசிவமும், சகோதரர்களும். 8446

## யு. எஸ். இசைக் கலைஞர் யாழ் வருகிறார்

(கொழும்பு)

சிறந்த அமெரிக்க இசையமைப்பாளரும் இசைக்குழு இயக்குனருமான டேவிட் அம்ரம் இலங்கை வர இருக்கிறார். இலங்கையில் குழலிசைப்பட்டறைகளை நடாத்தவுள்ள திரு அம்ரம் கொழும்பு குழலிசைக் குழுவினரோடு இணைந்து பணிபுரிவார். 'இசையின் உலகளாவிய தன்மை'' பற்றி உரைநிகழ்த்த இருக்கும் இவர் அமெரிக்க நிலையத்தில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சி ஒன்றிலும் பங்குபற்றுவார். [உ]

## சிங்கப்பூர் பயணமானார்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விஸ்வநாத சிவாச்சாரியார் சிங்கப்பூருக்குப் பயணமானார்.

ஆலய மகோற்சவம் ஒன்றை நடாத்தி வைப்பதன் பொருட்டே இவர் அங்கு சென்றுள்ளார்.

இவரைச் சமயப் பிரமுகர்கள் பலர் வழியனுப்பிவைத்தனர். [உ]

## கூ. மொ. வி. தலைவர்

[கொழும்பு]

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவராக திரு. ரஸீக் ஷுறாக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காலி மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணியாவார். [உ]

ஈழநாடு
The Eelanaadu

## இருபெரும் தலைவர்கள்

செயல் அதிகாரமுள்ள ஜனாதிபதியாக மாண்புமிகு திரு ஜே. ஆர். ஜயவர்த்தன பதவி ஏற்றுக்கொண்டதையடுத்து புதிய பிரதம மந்திரியாக கௌரவ திரு. ரணசிங்க பிரேமதாஸ பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கை அரசியல்வானில் இன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இந்த இரு தலைவர்களினதும் வளர்ச்சி நாட்டின் ஏனைய அரசியல் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

மிகஉயர்ந்த, வசதியுள்ள, படித்த குடும்பத்தைச் சேர்ந்தவரான திரு. ஜயவர்த்தன, மிகஎளிமையான வாழ்க்கையை அமைத்துக்கொண்டு அரசியல் வானில் படிப்படியாக மேல்நோக்கி ஏறிவந்துள்ளார். அதேசமயம் மிகச்சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவரான திரு. ஆர். பிரேமதாஸவும் மிகநிதானமாகவே படிப்படியாக வளர்ந்து இன்று பிரதமர் பதவியை வகிக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறார்.

சேனநாயக்கக் குடும்பத்தின் ஆளுமைக்குட்பட்டுக் கிடந்து பின்னர் சிதைவுற்றுப்போன ஐக்கிய தேசியக் கட்சியை ஒருங்கிணைத்து, பாராளுமன்றத்தில் அபரிமிதமானப் பெரும்பான்மையுடன் இன்று வீற்றிருக்கும் அளவுக்கு அதனை வளர்த்தெடுத்து பெரும் சாதனையொன்றை இத்தலைவர்கள் நிகழ்த்திக்காட்டினார்கள்.

இது அக்கட்சியினரிடையே மகிழ்ச்சியையும், மாற்றுக் கட்சியினரிடையே வியப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

பொருளாதார சீர்குலைவுக்கும், மொழி, மத வேறுபாடுகளுக்கும் உள்ளாகி மக்களிடையே நம்பிக்கையின்மை தலைதூக்கியிருந்த வேளையில் இவர்கள் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்.

இந்த நாட்டின் சகல மக்களும், மகிழ்ச்சியோடும், ஒற்றுமையோடும், வாழ்வதற்கு முழுமூச்சோடு பாடுபடுவதற்கு உறுதிபூண்டுள்ள இவர்கள், அந்தப் பணியினைச் செவ்வனே செய்து முடிக்கவென பொறுப்பான பதவிகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

சிதைவுற்ற கட்சியைக் கட்டியெழுப்பியதில் கிடைத்தவெற்றி சீர்குலைவின் விளிம்பில் நிற்கும் தாயகத்தைக் கட்டியெழுப்புவதிலும் இவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

சாதாரணமனிதன் தனது தகுதியின் நிமித்தம் உயர்வானநிலையை அடைவதும், பிறப்பின் காரணமாக உயர்ந்தவன் என்று கருதப்படும் மனிதன் சாதாரண மக்கள் மத்தியில் ஒருங்கிணைந்து பழகுவதும் நாகரிக சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பண்புகளாகும், இந்தப் பண்புகள் வளர்ந்து நம்நாடு உயர்வு தாழ்வு மத, மொழி பேதமற்ற சிறந்த ஜனநாயக நாடாக பரிணமிக்கவேண்டும்.

அதற்கு இந்த இருதலைவர்களின் பண்புகளும், பணிகளும் உறுதுணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

---

ஆனைக்கோட்டையில்

## நடைபெற்ற விசேஷ பூசை

(யாழ்ப்பாணம்)

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக பதவியேற்றதினமான கடந்த 4-ம் திகதி அவரதும் நாட்டினதும் நலன்வேண்டி ஐக்கிய தேசியக்கட்சிஆனைக்கோட்டை மத்திய கிளையினர் புளியங்கண்டுப்பிள்ளையார் கோவிலில் விசேஷ வழிபாடுகள் ஆற்றினர்.

கிளைச் செயலாளர் திரு. பி. பி. காந்தன், பொருளாளர் திரு. கே. எஸ், மணியம் ஆகியோர் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். திரு.காந்தன் காளாஞ்சு பெற்றார்.

பெருமளவில் மக்கள் கலந்துகொண்ட இவ் வைபவத்தில் பிரசாதம் சர்க்கரைப்பொங்கல் முதலியன வழங்கப்பட்டன. (அ)

---

# அமரர் ஜி ஜி. நினைவாக

## 1000 பேருக்கு அன்னதானம்

### வட்டு. எம். பி. ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு நாளை வியாழக்கிழமை காலை தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் 1000 பேருக்குத் தம் சொந்தச் செலவில் அன்னதானம் வழங்கவிருக்கிறார்.

விசேட பூஜைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் த. வி. கூ. பிரமுகர் திரு. கே. முருகரத்தினம் அமரர் ஜி. ஜி. நினைவாக விசேட பூஜை நடத்தவிருக்கிறார். கோட்டை முனியப்பர் கோவிலில் திரு. வி. யோகேஸ்வரன் எம். பி., திரு. எம். சிவசிதம்பரம் எம். பி ஆகியோர் தலைமையில் அன்னதானமும், பூஜையும் நடாத்தப்படும். நாளை யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயம், முஸ்லிம் பள்ளிவாசல் ஆகியனவற்றிலும் விசேட பிரார்த்தனை, தொழுகைகளும் நடைபெறும். (உ)

---

## "சுப்பையபிள்ளை ஓர் அவதார புருஷர்"

[யாழ்ப்பாணம்]

பண்டிதமணி வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளையின் மறைவு குறித்து யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் நடாத்திய இரங்கற் கூட்டத்தில் அதிபர் திரு. சிவைத்திலிங்கம், உப அதிபர் திரு சி. பொன்னையா, உதவி ஆசிரியர்கள் திரு. சோ. சண்முகரத்தினம், திருமதி ம. சண்முகரத்தினம் ஆகியோர் பின்வரும் கருத்துகள் தொனிக்க இரங்கலுரை நிகழ்த்தினர்.

"தென் மொழியையும், வடமொழியையும் மரபு தவறாது முறையாகக் கற்ற வித்துவான் ஐயா, தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினார். அவரது ஆற்றலை யாராலும் அளவிடமுடியாது. அவரை ஒரு அவதார புருஷர் என்றே பலர் கருதுகின்றனர்.

"நாவலர் குரு சிஷ்ய பரம்பரையில் உரையாசிரியர் திரு ம. க. வேற்பிள்ளை அவர்களிடமும், வேறு அறிஞர்களிடமும் கல்வி கற்று 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்; தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனும் திருமூலர் வாக்கிற்கு அமையச் சிறந்த தமிழ்த் தொண்டு செய்தார்கள்.

"பண்டிதமணி, வித்துவான் எனும் பட்டங்கள் ஐயாவை வந்தடைந்து மதிப்புப் பெற்றன. அவரின் ஆற்றல் இப்பட்டங்களுக்கு அப்பாற்பட்டது.

"வித்துவான் அவர்கள் நடராஜப்பெருமான் அனவரதமும் தாண்டவமாடும் தில்லைச்சிதம்பரத்தில் 1900ம் ஆண்டு தைமாதம் 22ந் திகதி ஜனனமானார். சிதம்பரத்தில் பிறந்த இவர், ஈழம் செய்த தவப்பயனால் இங்கு வந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தார்கள். இவ்வுலகவேலை முடிந்தமையாற்போலும் 22-1-78 அதிகாலை ஐயாவைத் தமது இடத்திற்கு இறைவன் அழைத்துவிட்டார். இவரது இடத்தை யாரும் நிரப்ப இயலாது. அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக."

---

ஆசிரியருக்குக் கடிதம்:

## 'பைலட் பிரேம்நாத்' படம் ஒரு கூட்டுத்தயாரிப்புத்தானா?

இலங்கை-இந்திய கூட்டுத் தயாரிப்பு என்று பெரிதாக "இலங்கையில்" விளம்பரப் படுத்தப்படும் 'பைலட் பிரேம்நாத்' உண்மையிலேயே ஒரு கூட்டுத் தயாரிப்புத்தானா? இந்தக் கேள்வி இலங்கைத் தமிழ்ப் பட வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள எல்லார் மனதிலும் எழத்தான் செய்கிறது.

கூட்டுத் தயாரிப்பென்றால் என்ன? இரு நாடுகளும் சேர்ந்து சரிக்குச்சரி தத்தமது நாட்டுக் கலைஞர்களைப் பயன்படுத்தி இரு நாட்டுக் கலைஞர்களின் பூரண ஒத்துழைப்புடன் தயாரிக்கும் தயாரிப்பேயாகும். 'பைலட்பிரேம்நாத்' அத்தகைதொருதயாரிப்பா?.

இந்திய - ரஷ்யக் கூட்டுத் தயாரிப்பு என்று "பர்தேஷி" என்றொரு படம் பல வருடங்களுக்குமுன் வெளியாகியது. அது உண்மையில் ஒரு கூட்டுத் தயாரிப்பே! இலங்கையில்கூட "த கோட் கிங்" என்றொரு ஆங்கிலப் படம் வெளியானது. அதை "லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்" நெறிப்படுத்தியிருந்தார், அதுவும் உண்மையில் ஒரு கூட்டுத்தயாரிப்பே; ஏன்? சென்ற வருடம் கூட "ரகஸ் குமந்தைய" என்றொருசிங்களப் படம் வெளியானது. இது இலங்கை-பாகிஸ்தானிய கூட்டுத்தயாரிப்பாகும். கதாநாயகன் பாகிஸ்தானிய உஸ்மான். கதாநாயகி ஈழத்து மாலினி, முழுக் கலைஞர்களும், திரைமறைவுக் கலைஞர்கள் உட்படச்சரிக்குச் சரி பங்குகொண்டார்கள். ஒலிப்பதிவை ஈழத்தின் பிரபல கமராநிபுணர் எம். ஏ. கபூர் கையாண்டிருந்தார். இசையமைப்பிலும் இலங்கையர் பங்கு பற்றினர். இது உண்மையிலேயே ஒரு கூட்டுத்தயாரிப்புத்தான்.

ஆனால் "பைலட்" பிரேம்நாத்தின் நிலை என்ன? [அது என்ன "பிரேம்நாத்" தமிழ்ப் அதுபெயரா?] கதைவசனம், டைரக்ஷன், ஒலி ஒளி, இசை எடிட்டிங் உட்பட எல்லாத் திரைமறைவுக் கலைஞர்களும், பிரதான நடிகர்களும் இந்தியர்களே! இதுதான் கூட்டுத் தயாரிப்பா? இதில் இலங்கையருக்கு [இலங்கைத் தமிழ்க் கலைஞர்களுக்கு என்னவேலை] மாலினி பொன்சேகாவை சிவாஜி கல்யாணம் செய்கிறார் அவரும் படஆரம்பத்தில் இறந்துவிடுகிறாராம். வேடிக்கைதான்!

எடுபிடிகளும் கூஜாதூக்கிகளும்தான் ஈழத்துத் தமிழ்க் கலைஞர்கள் அதிலும் ஸ்ரீசங்கரா, டீன்குமாரா என்று சண்டை வேறு.

இலங்கையை ஒரு விற்பனைச் சந்தையாகப் பயன்படுத்துவதே இப் படத்தின் நோக்கம்! வேறொன்றுமில்லை. மற்றதெல்லாம் வெறும் கண்துடைப்பே! எம். ஜி. ஆர். 'உலகம்சுற்றும் வாலிபன்' எடுத்தார். அது இந்திய-ஜப்பானிய கூட்டுத்தயாரிப்பு என்று விளம்பரம் செய்யவில்லையே, ஸ்ரீதர் சிவந்தமண் எடுத்தார் அது இந்திய ஐரோப்பிய கூட்டுத்தயாரிப்பு என்று அறிவித்தல்விடவில்லையே! 'பைலட் பிரேம்நாத்' துக்கு மட்டும் ஏன் இந்தத் தில்லுமுல்லு.

'பைலட் பிரேம்நாத்' தயாரிப்பாளர்களே! தமிழகத்தில் இருந்துவந்து இலங்கையில் படம் எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போங்கள். கூட்டு, சாம்பார் என்றெல்லாம் கொக்கரிக்காதீர்கள்!

கலைவாதி கலீல்.
(செயலாளர் மன்னார் மு.போ. எழுத்தாளர் சங்கம்)

---

## மணிவாக்கு

ஒருவரிடம் உள்ள சுயநலத் தன்மையைப் போக்கி, அவரைச் சுயநல மற்றவராக்கும் வல்லபம் ஓர் உண்மைச்சொல்லுக்கு உண்டு.

—காந்திமகான்

---

உதவி அரசாங்க அதிபர்கள்

## வர்த்தக ஸ்தாபனங்களில் திடீர் பரிசோதனை

(கரவெட்டி)

ஒவ்வொரு பிரிவு உதவி அரசாங்க அதிபர்களும் தமது பகுதிகளுக்கு உதவி விலைக்கட்டுப்பாட்டாளராக வர்த்தகஅமைச்சரால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி, உதவி அரசாங்க அதிபர்கள், தமது பிரிவு நுகர்ச்சியாளரின் முறைப்பாடுகளை விசாரித்தும் திடீர்ப் பரிசோதனையிட்டும் வருகின்றனர்.

ரின்பால் வைத்துக்கொண்டு வெளியே விற்பனைக்கு ஒரு ரின்னாவது வைக்காது மறைத்து வைத்த வர்த்தகர்களுக்கும், மாவை வைத்துக்கொண்டு இல்லையென்று கூறிய வியாபாரிக்கும் ரின்பால், மா வழங்கப்படாது என்று சங்கத்துக்கு உத்தரவிடப்பட்டதுடன், அண்மையில் உள்ள சங்கக் கடையில் பொருட்களைப்பெற மாற்றுஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும் காலாவதியான தராசுபடிகள், கொத்துகள், யார்மட்டத்தடிகளை சங்கக் கடைகள், தனிப்பட்ட கடைகளிலிருந்து எடுத்துச்சென்று வழக்குத் தொடரவும் இவ்வுதவி அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை எடுப்பதுடன் வர்த்தகர்களுக்கு ஆலோசனையும் வழங்கி வருகின்றனர்.

---

## தமிழர்பிரச்னை: இடதுசாரிகளை நம்பிப்பயனில்லை

"இந்தியாவின் சாதாரண மனிதன் மீண்டும் ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறான்" என்று இந்திய ஜனாதிபதி திரு. சஞசீவ ரெட்டி இந்தியக் குடியரசு தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார். இந்திய ஜனநாயகத்தைக் காக்கும்படியும் இந்திய மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாபெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் ஜனநாயகப் பண்பை மக்கள் பாதுகாத்து வருகிறார்கள். இதனைத் தொடர்ந்தும் அவர்கள் பாதுகாக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

மேலும் பாரத உபகண்டத்தில் ஜனநாயகம் வலுப்பெற்று வருவதற்கு இருபெரும் முக்கிய காரணங்களுண்டு. ஒன்று, அங்கு ஆத்மீக அடிப்படையில் எல்லாம் நடைபெற்றுவருகின்றன. இரண்டு, பாரதநாடு மாநிலஅரசாங்க முறையைக் கையாண்டுவருவதுமாகும். ஆகையினால் அங்கு தேவையற்ற பிரச்னைகள், எழுவதற்கு இடமில்லை.

இலங்கையும், இவ்வழியே செல்லுமாயின் ஜனநாயக ஆட்சிமுறைக்கு ஒருகாலமும் கேடுவிளையமாட்டாதென் பதை மிக ஆணித்தரமாக எடுத்துக்கூறவிரும்புகிறேன். இதனைவிடுத்து ஜனநாயக ஆட்சியைக் கைக்கொள்கிறோமென்று பசப்புவார்த்தைகளை அரசினர் வாரி வழங்குவதில் யாதொரு பயனும் காணமாட்டார்கள். செய்கைமூலம் ஜனநாயகத்தை சரியாக நிலைநாட்ட வேண்டும்!

தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்கும் இடதுசாரிகளுடன் சேர்ந்து போராடவும் [illegible] என்று திரு அ. அமிர்தலிங்கம் [illegible] கூறியதாக [illegible] பத்திரிகையில் [illegible] அதில், எதிர்க் [illegible] ரும் தமிழர் [illegible] கூட்டணிச் செய [illegible] யுள்ள முக்கிய வசனங்களை மாத்திரம் குறிப்பிடுகிறேன். தமிழினத்தை ஒரு தேசியஇனமாக ஏற்றுக்கொள்வதோடு அதன் சுயநிர்ணய உரிமையை இடதுசாரிகள் ஏற்றுக்கொண்டால் இந்த நாட்டின் தேசியபிரச்னைகளில் கைகோர்த்து போராடவும் தான் தயாராகவுள்ளேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது கவலைக்குரியதேயாகும். அவரைப் பற்றி ஒரு குறையோ குற்றமோ நான் சொல்வதற்கில்லை. அவரும் தன்னால் எடுக்கக்கூடிய முயற்சிகளையெல்லாம் எடுத்துப் பார்க்கிறார்.

ஆனால் எக்காரணங்கொண்டும் இடதுசாரிகளை நம்பி அவர்களுடன் கைகோர்த்து சுயநிர்ணயஉரிமையைப் பெற எத்தனிப்பது மண்குதிரையை நம்பி ஆற்றைக் கடப்பதற்கு ஒப்பாகுமென்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். மேலும் விழுந்தவன் கைகொடுத்து எங்களை எப்படி எழுப்ப முடியும்? நாங்கள் எங்கள் கொள்

(5-ம் பக்கம் பார்க்க)

# "இந்திய--பாக். உறவில் புதிய சகாப்தம் உருவாகும்"

## இஸ்லாமாபாத்தில் வாஜ்பாய் நம்பிக்கை

இஸ்லாமாபாத், பெப். 7

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் புதிய சகாப்தம் ஒன்று உருவாகும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளதென்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் இஸ்லாமாபாத்தில் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் வந்துள்ள திரு. வாஜ்பாய், பாகிஸ்தான் இராணுவச் சட்ட நிர்வாகி ஜெனரல் ஹியா ஹுல் ஹக் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார்.

இராணுவச் சட்ட நிர்வாகியின் வெளிநாட்டு விவகார ஆலோசகர் ஜனுப் ஆகா ஸாக்கி அளித்த இரவு விருந்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. வாஜ்பாய் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வாஜ்பாய் மேலும்பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் சுதந்திரம், ஆட்சி உரிமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றில் மூழு மரியாதையுடன் சேர்ந்து முன்னேறுவதன் மூலம் இருநாட்டினதும் முன்னேற்றத்துக்கான முழுப்பலனையும் அடையமுடியும்.

ஒரு நாட்டின் விவகாரத்தில் மற்றையநாடு குறுக்கிடுவதோ ஒரு நாட்டின் விவகாரங்களில் சந்தேகம் கொள்வதோபயனற்றது.

இரு நாடுகளுக்குமிடையே பரிஉணர்வும் நட்புறவும் மீண்டும் தோன்றும் என்ற நம்பிக்கையுடனேயே தாம் பாகிஸ்தானுக்கு வந்ததாகவும் திரு. வாஜ்பாய் கூறினார். (இ)

# பாலஸ்தீன மக்களின் தன்னுதிக்க உரிமைகளை வழங்கவேண்டும்

## பிரெஞ்சு அதிபர் கருத்து

பாரிஸ், பெப். 7

''பாலஸ்தீன மக்களின் தன்னுதிக்க உரிமைகளை நிச்சயம் வழங்கியே தீரவேண்டும்.''

இவ்வாறு பிரெஞ்சு ஜனாதிபதி திரு. வலெரி கிஸ்காட் டெஸ்டாஸ் தெரிவித்துள்ளார்

''தமக்கென ஒரு நாடில்லாத பாலஸ்தீன மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை உட்படச் சகல நியாயமான கோரிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட நாடுகள் மட்டுமல்ல, சகல உலக நாடுகளும் செவிசாய்க்கவேண்டும்'' என்றும் பிரெஞ்சு அதிபர் கூறியுள்ளார். (இ)

# "இந்திய காங்கிரஸ்கட்சியை நான் பிளவுபடுத்தவில்லை"

## குற்றச்சாட்டுக்கு இந்திரா மறுப்பு

பம்பாய், பெப். 7

''காங்கிரஸ்கட்சியை நான் பிளவுபடுத்தவில்லை. காங்கிரஸ் கட்சியிலிருந்த ஒரு குழுவினரே என்னைக் கட்சியிலிருந்துவெளியேற்றமுயன்றுகட்சியைஇரண்டாகப் பிளவுறச்செய்துவிட்டனர்.''

இவ்வாறு முன்னாள்இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பம்பாயில்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசகையில் கூறினார்.

காங்கிரஸ் கட்சியை திருமதி காந்தியே பிளவு படுத்திவிட்டாரென்ற ரெட்டி காங்கிரஸ் குழுவினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே திருமதி காந்திஇவ்வாறு கூறினார்.

தமது ஆட்சிக் காலத்தில் நெருக்கடி நிலை அமுல்செய்யப்பட்ட பின்னரே நாட்டின் பொருளாதாரம் ஓர் உறுதியான நிலையை அடைந்ததென்றும் கூறிய திருமதி காந்தி ஜனதா ஆட்சியில் பொருளாதார அபிவிருத்தியெதுவும் ஏற்படவில்லையென்றும் கூறினார். (இ)

## தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில்...

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் பெரிய புராணப் படன விரிவுரையில் கண்ணப்ப நாயனார் சரிதம், குருபூசை என்பன இடம்பெற்றன.

புராண படனம், ஆடிமாதம் வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. (உ)

"நெருக்கடி நிலைதவறுகள்

# இந்திராவும் சகாக்களும் சட்டத்துக்கு தப்பமுடியாது"

மங்களூர், பெப். 7

நெருக்கடி நிலை அமுலிலிருந்த போது இழைத்த தவறுகளால் ஏற்படும் விளைவுகளிலிருந்து திருமதி இந்திராகாந்தியும்அவரது சகாக்களும் தப்பமுடியாது.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் கர்நாடகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

நெருக்கடிநிலை கொடுமைகளுக்கு காரணமானவர்கள் எவராக இருந்தாலும் சட்டத்திலிருந்து அவர்கள் தப்பமுடியாதென்றும் திரு. சரண்சிங் கூறினார்.

நாட்டிலிருந்து ஊழலை முற்றாக களைந்தெறிவதே ஜனதா கட்சியின் கொள்கையென்றும் திரு. சரண்சிங் தெரிவித்தார். (இ)

# ரெட்டியும் சவானும் ஜனதாவில் சேருவார்களாம்

பம்பாய், ஜன. 7

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. பிரம்மானந்த ரெட்டியும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவானும் விரைவில் ஜனதாகட்சியுடன் இணைந்து விடுவார்கள்.

இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆரூடம் கூறியுள்ளார்:

பம்பாயில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

ஜனதாகட்சியில்இணைந்து கொள்வதற்கே இவர்கள் காங்கிரஸ்கட்சியைப் பிளவுபடுத்தினார்கள் என்றும் திருமதி காந்தி கூறினார். (இ)

## மக்கள் நலன் கருதி...

[ஊர்காவற்றுறை]

நாரந்தனை,சரவணை ஆகிய பகுதி மக்களின் வைத்திய வசதியை முன்னிட்டு வடக்கு நாரந்தனை ஒன்பதாம் கட்டையில் வைத்தியசாலையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அகில இலங்கை தேசிய வைத்திய சங்கத்தினால் நிறுவப்படும் இவ் வைத்திய சாலை திறப்புவிழா இம்மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் கே.வி.கே . திருலோகமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். [உ]

## நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பட்டணசபைப் பிரதேசத்தில் சபையில் இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வீதிகள் திருத்துவதற்கும், மின்சார விஸ்தரிப்புக்குமாக 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகப் பண்டத்தரிப்புப் பட்டணசபை விசேஷ ஆணையாளர் திரு.ஏ.ஞானசேகரம் தெரிவித்தார்

இந்த ஆண்டில் இச்சபைக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் உத்தேச வருமானம் ரூபா 3 லஷ்சத்து 45 ஆயிரம் ரூபா என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [அ]


இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளாஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
உறவுஸ் அண்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

Regal (Jaffna)
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
TWISTED NERVE
(color)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30,6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலசந்தரின்
"தாமரை நெஞ்சம்"
(புதிய பிரதி)

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறது
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

2-வது வெற்றி மாதம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷிணி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கணவன்

கடைசிவாரம்
லிடோ எம். ஜி. ஆர். - லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—விஜயலக்ஷ்மி நடித்த
வல்லவன் ஒருவன்

தினசரி: 10-30,2-30-6-30,9-30
ராஜா ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
[யாழ்ப்பாணம்] விஜயகுமார் மனோகர்
நடித்த



# சுவீப் முடிவு

(கண்டி)
நேற்றுமாலை கண்டியில் காணி விவசாய அமைச்சர் திரு. ஈ எல் சேனநாயக்கா தலைமையில் போகம்பரை மைதானத்தில் இடம்பெற்ற 649வது இலக்க சுவீப்பில் பரிசுபெற்ற முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
**42 S 0243**
(ஒரு லட்சம் அல்லது பேர்க்குஸன் உழவுயந்திரம் இழுவை வண்டியுடன் கூடிய உழவு யந்திரமும் மீதிப்பணமும்)

இரண்டாம் பரிசு
**22 L 0131**
(40,000 ரூபா அல்லது இழுவைவண்டியுடன் கூடிய இரண்டு சக்கர உழவுயந்திரமும் மீதிப்பணமும்)

மூன்றும் பரிசு
**21 N 0480**
ரூபா 10,000

தலா ரூபா 2,500 கொண்ட ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 22 A 0036 | 40 A 0227 |
| 59 A 0346 | 31 B 1000 |
| 31 B 0593 | 35 B 0230 |
| 54 B 0475 | 60 B 0527 |
| 60 B 0463 | 22 C 0452 |
| 44 C 0206 | 43 C 0984 |
| 75 C 0007 | 39 D 0245 |
| 59 D 0552 | 69 D 0039 |
| 76 D 0412 | 40 E 0770 |
| 01 E 0066 | 04 F 0306 |
| 33 F 0924 | 46 F 0275 |
| 57 F 0463 | 35 H 0194 |
| 37 H 0483 | 61 H 0194 |
| 70 H 0206 | 08 J 0021 |
| 12 J 0866 | 17 J 0818 |
| 28 J 0321 | 31 J 0095 |
| 47 J 0278 | 70 J 0088 |
| 29 K 0826 | 33 K 0874 |
| 48 K 0383 | 65 K 0909 |
| 01 L 0034 | 09 L 0272 |
| 43 L 0609 | 54 L 0971 |
| 60 L 0469 | 69 L 0709 |
| 18 M 0879 | 17 M 0325 |
| 27 M 0935 | 27 M 0921 |
| 56 M 0303 | 75 M 0281 |
| 27 N 0471 | 28 N 0024 |
| 62 N 0259 | 30 O 0036 |
| 50 O 0490 | 72 O 0513 |
| 48 O 0220 | 35 P 0356 |
| 46 P 0955 | |
| 45 P 0220 | 56 P 0400 |
| 63 P 0800 | 32 Q 0136 |
| 13 Q 0965 | 51 R 0857 |
| 04 S 0514 | 22 S 0383 |
| 58 S 0725 | 15 T 0153 |
| 71 T 0912 | 75 T 0002 |
| 74 T 0651 | 32 U 0166 |
| 70 U 0606 | 16 V 0519 |
| 34 V 0618 | 47 V 0052 |
| 01 W 0532 | 01 W 0288 |
| 19 W 0970 | 26 W 0373 |
| 11 X 0649 | 48 X 0965 |
| 58 X 0689 | 60 X 0002 |
| 62 X 0556 | 69 X 0549 |
| 80 X 0680 | 09 Y 0503 |
| 44 Y 0181 | 44 Y 0733 |
| 53 Y 0963 | 04 Z 0559 |
| 16 Z 0861 | 20 Z 0748 |
| 31 Z 0576 | 40 Z 0437 |
| 54 Z 0213 | 65 Z 0156 |
| 67 Z 0563 | |

[இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்.]

வடமராட்சி வடக்கு கிழக்கு

# உதவி அரச அதிபர் பணிமனை நிறுவப்படும்

(கரவெட்டி)
வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவுக்குப் பருத்தித்துறையில் புதிய உதவி அரசாங்க அதிபர் பணிமனையையும், வாசஸ்தலத்தையும் கட்ட யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் துரித நடவடிக்கைஎடுத்து வருகின்றார்.

பருத்தித்துறையில் பொருத்தமான அரசநிலம் இல்லாதபடியால், பொருத்தமான தனிப்பட்ட காணிஒன்றைசுவீகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகின்றன. இதற்கு இரண்டுலட்சம் ரூபா செலவு செய்யப்படவுள்ளது.

உதவிஅரசாங்கஅதிபர் திரு. த. மார்க்கண்டுவின் முயற்சியினால் மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் பல தடவைகள் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டதன் பலனாக இம் முயற்சி இப்போது வேகம் அடைந்துள்ளது.

காணிப்பதிவுக் கந்தோரையும் கோட்டுக்கு அண்மையில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் வாடகைக்கு வீடுகள் தற்காலிகமாகக் கிடையாமல் இருப்பதனால் அதற்கும் தனிக்கட்டிடம் போட ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம். [அ]

## தமிழர்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]
கையிலே திடமனப்பான்மையுடன் செயல்படவேண்டும். அதாவது ஜனநாயக அடிப்படையிலே செயல்பட்டு, சத்தியம், அகிம்சை எனும் இரு ஆயுதங்களையும் தாங்கி, எங்கள் சுயநிர்ணயஉரிமையைப் பெறுவது மிக இலகு என்பதில் நம்பிக்கைவைக்கவேண்டும். இதற்குத் தேவை ஆத்மீகபலமேயொழியவேறொன்றுமில்லை.

எங்கள் பாரம்பரிய தமிழகத்தைக் காப்பதற்கும், தமிழ்மொழி, கலை, கலாச்சாரத்தைக் காப்பாற்றத் தமிழ்த் தலைவர்கள் (சுயாட்சிக் கழகத் தலைவர், இலங்கா-பாரத ஒற்றுமைமுன்னணித் தலைவர், மற்றும் தலைவர்கள்) ஒன்றிணைந்து ஒரேகுரலில் "சிங்கள ஏகாதிபத்தியவாதிகளே எங்களுக்கு மாநில சுயாட்சியை வழங்குக என்று கேட்டால், நிச்சயம் எங்களுக்கு வழங்கப்படும்.

பங்களாதேஷ் சுதந்திரம் பெற்றதுபோல் நாங்கள் பெற வேண்டிய அவசியமில்லை. இரத்தம் ஒருதுளியேனும் சிந்தாமலே பெறுவோம்.

மு. பரமநாதன்
காரைநகர்.

## நீர்வையில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(திருநெல்வேலி)
கோப்பாய் தெற்கு கலைமணி சனசமுகநிலையம் தனது 29வது நிறைவு விழாவை யொட்டி மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியை நடாத்துகின்றது. இவ்விழா இம்மாதம் 25ந் திகதி பிற்பகல் நீர்வேலி வாய்க்கால்தரவை மைதானத்தில் திரு. அ கனகலிங்கம்தலைமையில் நடைபெறவிருக்கிறது. [அ]

## மூலிகைகள் உற்பத்திவிழா

[யாழ்ப்பாணம்]
வட-இலங்கை சித்த-ஆயுர்வேத வைத்தியர்கள் சம்மேளனத்தின் அழைப்பிற்கிணங்க, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், திட்டமிடல் அமைச்சின் பிரதிப்பணிப்பாளர், தென் இலங்கை ஆயுர்வேத வைத்தியர்கள், அச்சுவேலி கிராமஅபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் முன்பாக அமைந்துள்ள மூலிகைகள் உற்பத்திநிலையத்திற்கு சமூகம் தந்து, சந்தனம் முதலிய மூலிகைகளை நாட்டி, மூலிகைகள் உற்பத்தி விழாவை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள், இலங்கையில் மூலிகைகள் உற்பத்தி செய்தல், சேகரித்தல் போன்ற விடயங்களில். எம்மக்கள் எவ்வாறு செயல்படவேண்டுமெனவும், அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், அரசாங்கம் வைத்திய சங்கங்கள், தனிப்பட்ட வைத்தியர்கள் இவ்விடயத்தில் எவ்வாறு உதவி புரியலாமெனவும் கருத்துக்களைத் தெரிவித்தனர். [உ]

## கூட்டணி வாராந்தக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]
தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டணித் தலைமைப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமை வகிப்பார்:

"அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் முன்வைத்த சமபல பிரதிநிதித்துவத்தின் ஐம்பதுக்குஐம்பது கோரிக்கை ஏற்படுத்தித் தந்த தமிழின எழுச்சி "என்னும் தலைப்பில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. இ. கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி திரு. விஸ்வநாதன் முதலானோர் உரை நிகழ்த்துவர். [உ]

## இளைஞர் குழு வெற்றி

[யாழ்ப்பாணம்]
பெருமாள் கோவிலடி இளங்கிருஷ்ணா விளையாட்டுக் கழக இளைஞர்களுக்கும் அதன் முன்னாள் அங்கத்தவர்களுக்கும் (திருமணமானவர்கள்) இடையேநடைபெற்ற சிநேகிதபூர்வமான கிரிக்கெட் போட்டியில் இளைஞர்கள் வெற்றி பெற்றனர்.

ஸ்கோர் விபரம்: இளைஞர்—41,61-8. திருமணமானவர்கள்—51,49. [இ]

RIO (Jaffna)
Daily 4 Shows
HIGH VELOCITY

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ராஜன்-பானுமதி
பூவும் பொட்டும்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
தாயைக் காத்த தனயன்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம் டைரக்ஷன்: கே. பாலசந்தர்

# சிங்களத் தேர்ச்சியின்மை தமிழரைப் பாதிக்காதாம்!

## ஜே. ஆர். கூறியதாக அமிர்தலிங்கம் தகவல்

[யாழ்ப்பாணம்]

''வடமராட்சிப் பகுதியில் தற்போது பஸ் சேவை படுமோசமான நிலையில்உள்ளது. இதனை நான்அறிவேன். எனது சக ஆட்சிமன்ற உறுப்பினர்களான திரு த. இராசலிங்கமும், க. துரைரத்தினமும் இதுபற்றி எனக்குத் தெரிவித்துள்ளார்கள். நாம் இதுவிடயமாக போக்கு வரத்து அமைச்சருடன் பேசியுள்ளோம். அவர் நம்பிக்கைதரக்கூடிய விதத்தில் எம்முடன் பேசினர். அவரின் நம்பிக்கையை வைத்துத்தான் நாமும் உங்களுக்கு நம்பிக்கையை அளிக்கவேண்டியுள்ளது.''

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் நடைபெற்ற நிகழ்ச்சிஒன்றின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

தொழிலாளர் பிரச்சினைகளையும் பஸ் பற்றுக்குறை மற்றும் தேவைகள் பற்றியும் வடபகுதி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு தெரிவிப்பதற்காக மேற்படி நிகழ்ச்சியை இலங்கைத் தொழிலாளர் கழகம்ஏற்பாடு செய்திருந்தது.

மேற்படி நிகழ்ச்சியின்போது உடுப்பிட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் தொகுதிகளின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொண்டார்.

தொழிலாளர் குறைகளைக் கேட்பதற்காக டிப்போவிற்கு வருகைதந்த தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் புலோலி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையை அடுத்து டிப்போ காரியாலயத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்கள். டிப்போ நுழைவாயிலில் வைத்து டிப்போ முகாமையாளர் திரு. பி. யு. மகாலிங்கமும் தொழிற்சங்க பிரமுகர்களும் இன்னும் பலரும் மாலைகளை அணிவித்து இவர்களை வரவேற்றனர் திருமதி மங்கையர்கரசிக்கும் பெண் ஊழியர் திருமதி பு சுபத்திரா மாலையணிவித்து வரவேற்றார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில், ''தொழிலாளர் இங்கே எழுத்து மூலமும் என்னிடம் தங்கள் குறைபாடுகளை எடுத்து விளக்கியுள்ளார்கள் நான் தொழிலாளரின் பதவியுயர்வு சம்பந்தமாக பிரதமராகஇருந்த திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நேரில் எடுத்துச் சொல்லியுள்ளேன். அவர் எனக்கு கடிதம் ஒன்றின் மூலம் பதில தந்துள்ளார். பொதுநிர்வாக அமைச்சர், உள்நாட்டு அமைச்சர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவினருடன் இதுபற்றி ஒரு சந்திப்பை ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார், சிங்களமொழி சித்தி அடையாததன் காரணமாக சாதாரண சாரதிகளும் நடாத்துநர்களும் பாதிக்கப்படுவதை நாம் அனுமதிக்கமுடியாது. நாம் பலரும் இ. போ. ச. மேலிடத்துடன் தொடர்புகொண்டும் எந்தவித கோரிக்கையும் நிறைவேறவில்லை. நேரடியாக அதாவது இறுதியாக இப்பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் எழுப்புமாறு தொழிலாளர்கள் வேண்டியுள்ளனர். தேவை ஏற்படுமானல் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினைகள் முன்வைக்கப்படும். நான் தனிப்பட்ட முறையில் திரு. ஜெயவர்த்தனவை சந்தித்தபொழுது 'தமிழர் சிங்களத்தில் சித்தியடையாததன் காரணமாக பாதிக்கப்படமாட்டார்கள்' என என்னிடம் கூறினர்.

அப்பொழுது சமத்துவம் நீதி என்ற அடிப்படையில் தமிழ் தொழிலாளரின் மீது கருணை காட்டவேண்டுமென்று கூறினேன். அதற்கு அவர் நடைமுறைக் கஷ்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். அவரிடம் அதிகாரம் உள்ளது. என்ன காரணத்திற்காக அவர் யோசிக்கவேண்டும்? அகப்பை அவர் கையிலானல் முதல் பந்தியென்ன? அடிப்பந்தி என்ன? எல்லாம் ஒன்று தானே!

நம் தொழிலாளர்கள் இங்கு குமுறிக்கொண்டு மனவேதனையுடன் பொதுமக்களுக்காக உழைப்பதை நான் அறிவேன். அவர்களின் சேவை நோக்கத்தினை நாம் பாராட்டாமல் விடமுடியாது. இந்த டிப்போவிற்கு குறைந்தது மேலும் 10 பஸ் வண்டிகளையாவது பெற நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். இப் பத்து பஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்படாத புத்தம் புது பஸ் வண்டிகளாகவே இங்கு வரும் என்பதை எடுத்துரைக்கவிரும்புகின்றேன். உரியமுறையில் யாருக்காவது பதவிஉயர்வுகள் வழங்கப்பட்டு இருப்பின் ''நீங்கள் தனிப்படஎழுதி எம் பி திரு த இராசலிங்கத்திடம் சமர்ப்பியுங்கள். அவர் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்.

நான் தொழிலாளரின் மனவேதனைகளை புரிந்துகொண்ட அதேவேளையில் அவர்களின் இனஉணர்ச்சியையும் புரிந்துகொள்ளமுடிந்தது. தாம் தமிழர்கள் அதனால்தான் பாதிக்கப்பட்டுள்ளோம் என இனரீதியான சிந்தனை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த உணர்வு ஏற்பட்டதை யிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். தொழிலாளர்களே ''அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு'' என்பார்கள் ஆகவே நீங்கள் எல்லோரும் ஒரேகுரலில் நின்று. உங்கள் உரிமையை கோருவீர்களேயானல் நாமும் உங்களுக்கு கை கொடுக்க பின்னிற்க தயங்கமாட்டோம் என்றார்.

உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு த இராசலிங்கம் பருத்தித்துறை உறுப்பினர் திரு க. துரைரத்தினம், யாழ்ப்பாண உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் தொழிலாளர்கள் மத்தியில் பேசினர். (நெல்லி. பரு. நிரு)

## மூன்று நாள் வெள்ளி விழா

[அரியாலை]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், சனசமூக நிலையத்தினதும் வெள்ளிவிழா இம்மாதம் 17, 18, 19ந் தேதிகளில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இந்த வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் மரதன் ஓட்டம், விநோத உடைப் போட்டி, பேச்சுப் போட்டி, பட்டி மன்றம், கவியரங்கு, நடனம், நாட்டுக் கூத்து என்பன முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறவிருக்கின்றன. [அ]

## ''நிரந்தரசமூக சமாதானத்திற்கு தீண்டாமை ஒழியவேண்டும்''

[அரியாலை]

''சர்வோதய சமுதாயத்தின் மூலம்தான் உலகில் நிரந்தர சமாதானம் ஏற்பட முடியும். சமூகங்களுக்கிடையே நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமானல் சமூக ஒற்றுமை ஏற்படவேண்டும். தீண்டாமை சமூகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்படவேண்டும். சமூகத்திடையே பூரண மதுவிலக்கு அமுலாகவேண்டும். இதனையே மகாத்மாகாந்தி தமது தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார்.''

இவ்வாறு உடுவில் தெற்கு வள்ளுவர் கலைமன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி கூட்டத்தில் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் உபதலைவர் திரு. பி ஏசேக்கியல் பேசுகையில் குறிப்பிட்டார்.

கலைமன்றத் தலைவர் திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு. க. கிருஷ்ணராசா பேசுகையில், ''மகாத்மாவை நினைவுகூரும் இச்சந்தர்ப்பத்தில் அவரது தீர்க்கதரிசனமான மாண சர்வோதய தத்துவத்தைச் செயல்படுத்த நாம் முயற்சி செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எம். சிவதாசன், எஸ். தில்லைநாதன், வே. மார்க்கண்டு, வே. ஞானரத்தினம், என். தம்பிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். [அ]

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

## எரிபொருள் தட்டுப்பாடு அமைச்சருக்கு 'அமிர்' தந்தி

[பண்டத்தரிப்பு]

''யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பலத்த எரிபொருள் தட்டுப்பாட்டினல் இப்பகுதியிலுள்ள விவசாயிகள், வாகனச் சொந்தக்காரர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். உடனடியாக இங்கு தேவையான பெட்ரோல், மண்ணெண்ணை, பிரேக் ஒயில், டீசல் என்பவற்றை அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. சிறில் மத்யூ, பெட்ரோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் வேண்டியுள்ளார். [அ]

## எருமைத் திருடர்கள்

[பாணந்துறை]

முப்பது எருமைகளை அவற்றின் உரிமையாளரிடம்இருந்து திருடியதாம் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று.

ககட்டுவ பொலிசார்சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

எருமைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. [உ]

## அமரர்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமி கோவிலில் உருத்திராபிஷேகத்திற்கும் ஜி. ஜி.ஞாபகார்த்தகுழு ஏற்பாடு செய்துளது. மற்றும் சகல சமய ஆலயங்களிலும் விசேட வழிபாட்டிற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

## மரண அறிவித்தல்

### யோன் செல்லையா

யோன் செல்லையா உரும்பிராய் கிழக்கு காலமாகிவிட்டார். இவர் பாய்க்கியத்தின் அன்புக் கணவரும், எற்வேட் இராசா (யாழ்ப்பாண வளாகம் வட்டுக்கோட்டை), ரொபேட் விற்றர், லோறன்ஸ் (இங்கிலாந்து), ஆதர், தங்கராணி, இன்பநாயகி ஆகியோரின் தகப்பனுரும், மேரிப்பிள்ளை, சிவகுரு, சின்னத்தங்கச்சி ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னரின் பூதவுடல் இன்று 8-2-78 புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித மிக்கேல் ஆலயத்தில் இருந்து எடுத்துச்செல்லப்படும். 8449

## நன்றிநவிலல்

### சின்னத்தம்பி

2-2-78ல் காலமான சங்கானை கிழக்கு தொட்டிலடியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் சின்னத்தம்பியின் ஈமச்சடங்குகளில் பங்குபற்றியும், அனுதாபச்செய்தி அனுப்பியும், மற்றும் பலவழிகளிலும் ஆறுதல் நல்கிய உற்ருர் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம். தனித் தனி நன்றி தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்ருேம். திருமதி நாகேஸ்வரி (மனைவி) மக்கள்: பாஸ்கரன், கனகேஸ்வரி. 8445

## கூலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாள்ர்கள் சங்கங்களுடன் சேர்ந்தி சரிகூலி பெறவும் தயங்குகிருர்கள்.

'தற்போதைய நிலையில் 10,000 சுருட்டு முடிக்கும் முதலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 75 கூலியால் மிச்சம் இருக்கிறது. ஆகவே மேலும் கூலியை உயர்த்துவதனல் 1000 சுருட்டுக்கு முதலாளிமார்கள் 20 ரூபா கூட்ட விற்பனையாளர் ரூபாய் 30 கூட்ட மொத்தம் 50 ரூபா சுருட்டின் விலைஉயர்கிறது. இதன் பலன் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினல் கஷ்டப்பட நேரிடும். முதலில் சரிவரக்கூலி பெற்றுக்கொண்டு பின்னர் கூலிஉயர்வு பற்றிச் சிந்திப்போம்.

'இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. க. முதலியார், செயலாளர் திரு. க. தங்கராசா, உபசெயலாளர் திரு. செ. தம்பிராசா, தனதிகாரி திரு. க. விசுவலிங்கம், கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர். [க-அ]

## இயக்குநர் சபை உறுப்பினர்

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதேசசபை இயக்குநர் சபை உறுப்பினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், சட்டத்தரணியுமான அளவெட்டியைச் சேர்ந்த திரு. மு. திருநாவுக்கரசு திட்டமிடல் பொருளாதார அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளார். [அ]

## திருமண அழைப்பு

மணமகள்:
கதிரமலைச்செகசோதி
மணமகன்:
பத்மநாதன் A.C.M.A.

[கணக்காளர், இறைச்சாலை திணைக்களத் தலைமையலுவலகம்] இடம்: நல்லூர் சிவன் கோவில், முகூர்த்தம்: 10-2-78 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00—1-30 வரையும் வரவேற்பு உபசாரம்: மணமகள் இல்லத்தில் அன்றுமாலை 5-00 மணி தொடக்கம் 8-00 மணி வரையும் நடைபெறும. உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

-S.K. கந்தையாவும், பரியாரும், [உரிமையாளர், ஸ்ரீமுருகன் அரிசிஆலை, S K கந்தையா அன் சன்ஸ், கந்தையா கட்டிடம், பன்குளம், திருகோணமலை], கந்தன் கருணை, கட்டுவன், தெல்லிப்பழை.

8450